# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC.No. 98/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : சூர்யா | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th February 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் சேலத்தில் வசித்து வருகிறேன். நான் ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். 16. 8. 2021 ஆம் தேதி இரவு நேரத்தில் ஓட்டலில் வேலை செய்து கொண்டிருந்தபோது, எங்கள் ஓட்டலுக்கு முன்பாக விபத்து நடந்தது. வெளியே கூட்டமாக இருந்தது. எங்கள் ரூமுக்கு அருகே ராயல் என்ஃபீல்டு பைக் நின்று கொண்டிருந்தது. இரவு எடுக்க முடியவில்லை என்பதால் காலையில் வந்து எடுத்துக் கொள்வதாக சொன்னார்கள். அது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள் ஆனால் இந்த வழக்கு விபத்து எப்படி நடந்தது யார் காரணம் போன்ற எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பு வழக்கைச் சார்ந்து சாட்சிமளிக்காததால் பிறழ் சாட்சியமாக அறிவிக்குமாறு கேட்டு அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 16 8 2021 ஆம் தேதி இரவு எட்டு முப்பது மணி அளவில் அமுதம் பஞ்சாபி ஹோட்டலில் வெளியே கேட்டிற்கு அருகே நின்று கொண்டிருந்தபோது ஈரோடு டு முத்தூர் மெயின் ரோட்டில் ஸ்ப்ளெண்டர் வாகனத்தில் ரோட்டின் ஓரமாக ஒருவர் வந்து கொண்டு இருந்தபோது அவருக்கு எதிர் திசையில் பதிவு எண் தெரியாத ஒரு நான்கு சக்கர வாகனத்தை முந்திக்கொண்டு ஒரு ராயல் என்ஃபீல்டு இருசக்கர வாகனம் வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து ஸ்ப்ளெண்டர் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விட்டதாகவும் அந்த விபத்தில்

இருவருமே கீழே விழுந்து விட்டதார்கள் என்றும், அவர்களை நான் போய் பார்த்து மீட்டேன் என்றும் போலீஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன்என்றால் சரியல்ல தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை:இல்லை

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC.No. 98/2024**

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : அக்பர்அலி | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th February 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு நகராட்சி நகர் சோலார்புதூர் வசித்து வருகிறேன். நான் RD பள்ளியில் வேன் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். 16.08. 2021 ஆம் தேதி இரவு 08.30 மணிக்கு AMS பேன்சிக்கடையான எங்கள் கடையில் நான் இருந்தபோது இரவு 08.30 மணியளவில் என் கடை முன்பு டமார் என சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தேன். ராயல் என்பீல்டு பைக்கும், ஸ்ப்ளெண்டர் பைக்கும் ஒன்றுக்கொன்று மோதி விபத்து ஏற்பட்டது தெரியவந்தது. மேற்படி இருவருக்குமே பலத்த காயம் ஏற்பட்டது. அங்கு இருந்த ஒரு நபர் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வந்து இருவரையும் ஏற்றி ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். மறுநாள் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பு வழக்கைச் சார்ந்து சாட்சிமளிக்காததால் பிறழ் சாட்சியமாக அறிவிக்குமாறு கேட்டு அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 16. 8. 2021 ஆம் தேதி இரவு08.30 மணி அளவில் AMS பேன்சிக்கடையில் இருந்த போது ஈரோடு டு முத்தூர் மெயின் ரோட்டில் ஸ்ப்ளெண்டர் வாகனத்தில் ரோட்டின் ஓரமாக ஒருவர் வந்து கொண்டு இருந்தபோது அவருக்கு எதிர் திசையில் பதிவு எண் தெரியாத ஒரு நான்கு சக்கர வாகனத்தை முந்திக்கொண்டு ஒரு ராயல்

என்ஃபீல்டு இருசக்கர வாகனம் வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து ஸ்ப்ளெண்டர் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விட்டதாகவும்,அந்த விபத்தில் இருவருமே கீழே விழுந்து விட்டதாகவும், அவர்களை நான் போய் பார்த்து மீட்டேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை: இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC.No. 98/2024**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th February 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் லக்காபுரம் சாணார் மேட்டில் வசித்து வருகிறேன். மளிகைக் கடை வைத்துள்ளேன். 17.08. 2021 ஆம் தேதி காலை 9.15 மணிக்கு மொடக்குறிச்சி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து முந்தைய நாள் லக்காபுரம் சாணார் மேட்டில் விஜபி கார்டன் போகும் வழியில் முத்தூர் மெயின் ரோட்டில் ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக அந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. வரைபடம் தயார் செய்திருந்தார்கள். விபத்து நடந்தது சம்பந்தமாக போலீசார் என்னிடம் சாட்சியாக கையெழுத்து செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. போலீசார் சொன்னதை வைத்து கையெழுத்து போட்டேன். நான் சொன்ன தேதியில் சொன்னவாறு சொன்ன நேரத்தில் கையெழுத்து எதுவும் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்பொழுது

போலீசார் கேட்டுக் கொண்டதற்கு  சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்  என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:இல்லை